சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.52/2021

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19–ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889 ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44 வது பிரிவு 5 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – அழகுராஜ் (Pw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 30.04.1981 ம் தேதியிட்ட குருவம்மாள், வெங்கிடசாமி, குருசாமி , பத்மாவதி ஆகியோர் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை SRO நகல் **வா.சா.ஆ.1**. 07.11.2019 ம் தேதியிட்ட பத்மாவதி, வெங்கிடசாமி பெயரில் உள்ள கூட்டுப்பட்டா இணையதள நகல் **வா.சா.ஆ 2. 09.04.2005 ம்** தேதியிட் வாதி, வாதியின் சகோதரர் பாண்டியராஜ், வெங்கிடசாமி, ராஜசேகரன் ஆகியோர் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் அசல் **வா.சா.ஆ 3**. 12.04.2005 ம் தேதியிட்ட வாதியும், வாதியின் சகோதரும் சேர்ந்து வெங்கட்ராமன் என்பவருக்கு தாவா சொத்தையும் சேர்த்து எழுதிக்கொடுத்த அடமானக் கடன் பத்திரம் அசல் **வா.சா.ஆ 4**. 05.12.2005 ம் தேதியிட்ட மேற்படி அடமானக்கடன் பத்திரத்தை மீட்டதற்கான ரசீது அசல் **வா.சா.ஆ 5.** 27.06.2019 ம் தேதியிட்ட வெங்கிடசாமி, 1 ம்

பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ 6.** 01.07.2019 ம் தேதியிட்ட அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ 7**. 04.03.2019 ம் தேதியிட்ட வெங்கிடசாமி, 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் SRO நகல் **வா.சா.ஆ 8**. 04.12.2017 ம் தேதியிட்ட பத்மாவதி இறப்பு சான்றிதழ் ஜெராக்ஸ் தாக்கல்.

(வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.